# இ / பாலுகம்பளை தமிழ் வித்தியாலயம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022

## தரம் - 05

# தமிழ்மொழி

**மாணவர் பெயர் -** ................................ **01 மணித்தியாலயம்**

**தொகுப்பு ஆசிரியர் - K. ஹரிபிரசாத்** ( SLTS, Primary, B,Ed )

**01. பின்வரும் பந்தியை வாசித்து சுயவிபரக்கோவையை பூர்த்தி செய்க.**

கஹவத்தை இராமநாதன் கல்லூரியில் ஐந்தாம் தரத்தில் ரதுர்ஷன் கல்விகற்கிறான். தந்தையாரான சிவராமன் தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராக பணிபுரிகிறரர். தாயாரான சந்திரமதி ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். ரதுர்ஷனுக்கு ஒரு சகோதரனும் இரண்டு சகோதரியும் உள்ளனர். பத்து வயதுடைய ரதுர்ஷன் கபடி விளையாடுவதில் ஆர்வம் உடையவன் ரதுர்ஷன் ஓய்வு நேரங்களில் கதைப் புத்தகங்கள் வாசிப்பான்.

Education கல்வி அதியாபன

**சுயவிபரக் கோவை**

01. முழுப் பெயர் : ..........................................................................
02. வயது :..........................................................................
03. கற்கும் தரம் :..........................................................................
04. கற்கும் பாடசாலை :..........................................................................
05. தந்தையின் பெயர் :..........................................................................
06. தந்தையின் தொழில் :..........................................................................
07. தாயின் பெயர் : ..........................................................................
08. தாயின் தொழில் : ..........................................................................
09. விருப்பமான விளையாட்டு : ..........................................................................
10. பொழுது போக்கு : ..........................................................................

**02. இடைவெளிக்குப் பொருத்தமான மரபுப்பெயர்களை எழுதுக.**

01. பலா கொட்டை எனின் தென்னை ..................................
02. ஆமணக்கு முத்து எனின் சோளம் ..................................
03. மா வடு எனின் பப்பாசி ..................................
04. பனை நுங்கு எனின் பலா ..................................
05. நாய் குரைக்கும் எனின் பல்லி ..................................

**03. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுக.**

01. கை கூடுதல் ……………………………………………..

02. வாகை சூடுதல் ………………………………………

03. பூசி மெழுகுதல் ………………………………………

04. வாய்காட்டுதல் …………………………………………

05. நட்டாற்றில் விடல் ……………………………………..

**04. பொருத்தமான இணைமொழிகளை தெரிந்து வெற்றிடங்களை நிரப்புக.**

| உற்றார் உறவினர், அல்லுபகலும், வரவு செலவு, சீரும் சிறப்பும், ஏறக்குறைய |
|---|

01. அங்கே ……………………………………….. ஆயிரம் மக்கள் கூடினர்.

02. அவனுக்கு ……………………………….. எவருமில்லை

03. உழவன் ……………………………………… பாடுபட்டு உழைத்தான்.

04. மணமக்களை யாவரும் ……………………………….. வாழ வாழ்த்தினர்.

05. அப்பா மாத இறுதியில் ………………………………விபரங்களை கணக்கிட்டார்.

**05. பினவரும் இரட்டைக் கிளவிச் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுக.**

01. சல சல …………………………………………………………………………..

02. பள பள ………………………………………………………………………….

03. குடு குடு ………………………………………………………………………..

04. விண் விண் ………………………………………………………………………

**06. பின்வரும் விடுகதைகளுக்கான விடைகளை எழுதுக.**

01. ஆனை விரும்பும் சேனை விரும்பும் அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும் அது என்ன? ……………………………………………………………..

02. உடல் சிவப்பு வாய் திறந்திருக்கும் உணவு காகிதம் அது என்ன?

…………………………………………………………………

03. ஏற முடியாத இடத்தில் எட்டப்பறக்கும் அது என்ன?

…………………………………………………………………..

**07. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

01. கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும் ………………………………………..

02. அழுத பிள்ளை பால் குடிக்கும் ……………………………………………….

03. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் …………………………………………

04. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் ……………………………………

05. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் ………………………………………

**08. பின்வரும் சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுக.**

01. இ. ம. வ. :.........................................................................................

02. இ. பெ. கூ. : ...................................................................................

03. இ. மி. ச. :.........................................................................................

04. த. பெ. இ. : .......................................................................................

05. ம. ப. பா. :.........................................................................................

**09. பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக.**

01. மீன் + இடம் : ................................................................................

02. பொன் + குடம் : ............................................................................

03. முள் + செடி : ...............................................................................

04. ஐந்து + புலம் : ............................................................................

05. நாள் + காட்டி : .............................................................................

**10. பின்வரும் சொற்களை பிரித்தெழுதுக.**

01. கீரைப்பாத்தி : ...........................................................

02. முந்நூறு : ....................................................................

03. காலைக்காட்சி : ...........................................................

04. புற்றரைகள் : ...............................................................

05. கப்பற்கூலி : .................................................................

**11. ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.**

01. தாமரை : ..................................................

02. விலாசம் : .................................................

03. வயது : .....................................................

04. நாடு : .......................................................

05. நதி : .........................................................

**12. எதிர்கருத்துச் சொல்லை எழுதுக.**

01. இன்சொல் : ..............................................

02. வெயில் : .................................................

03. இன்பம் : ..................................................

04. மாரி : .......................................................

05. ஆக்கம் : ..................................................

Education கல்வி அධ්‍යාපන

**13. பின்வரும் தொடர்மொழிக்குறிய ஒரு மொழியை எழுதுக.**

01. அறிஞர்கள் வாதிடும் களம் ……………………………………………………….

02. பகையரசருக்கு கொடுக்கப்படும் திறைப் பொருள் ……………………………….

03. ஒன்று போல் இருக்கும் மற்றொன்று ……………………………………………..

04. வீண் செலவு செய்பவன் …………………………………………………………….

05. அனைத்து உடைமைகளையும் இழந்தவன் …………………………………….

**14. பின்வரும் வினாக்களக்கு விடை தருக.**

01. ''மீனினம் ஓடிப் பரக்குதம்மா'' என்ற பாடலை பாடியவர் யார்? ……………………

02. சின்னத்தம்பி புலவர் வாழ்ந்த ஊர் எது? ………………………………………………

03. ''பவளக் கொடி'' என்ற பாடலைப் பாடியவர் யார்? ………………………………

04. தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர் யார்? …………………………………….

05. கிராமிய விளையாட்டுக்கள் இரண்டு தருக? ………………………………………..

**15. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.**

01. ஆகா எவ்வளவு அழகான பூங்கா

02. நேத்திரம் என்பதன் பொருள் யாது

03. தோட்டத்தில் சிவப்பு வெள்ளை மஞ்சள் நிறப் பூக்கள் காணப்பட்டன

04. சிற்பங்களை தொடவேண்டாம் என்று கூறினார்

16. **பின்வரும் காட்சிப்படத்தை பார்த்து பொருத்தமான மூன்றுவாக்கியம் எழுதுக (வாக்கியத்தில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக இருப்பதுடன் குறைந்தது ஐந்து சொற்கள் இருத்தல் வேண்டும்)**



……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………


……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY
( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

**075 287 1457**

BUY BOOKS

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page